

தமிழ்நாடு பாரத சாரண – சாரணியர் இயக்கம் சார்பில் ஈரோடு மாவட்டம் பெருந்துறையைச் சேர்ந்த கல்வி சாரண – சாரணியர்களுக்கான ஆண்டு பயிற்சி மற்றும் திருத்திய சோபன் பயிற்சி முகாம் சென்னிமலை அருகில் உள்ள தனியார் கல்லூரியில் ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சம்பத் தலைமையில் நடைபெற்றது. இந்த முகாமில், தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

### சென்னை மாவட்டத்தில்

## பள்ளிகள் - கல்லூரிகளுக்கு இன்றும் விடுமுறை!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச. 7 -

‘மிக்ஜாம்’ புயல் காரணமாக ஏற்பட்ட கனமழையால் சென்னை, மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு 4.12.2023 முதல் 6.12.2023 வரை தமிழ்நாடு அரசு விடுமுறை அறிவித்திருந்தது.

புயல் வெள்ளம் பாதித்த சில பகுதிகளில் நிவாரணப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மாணவர்கள் நலன் கருதி, இன்று (7.12.2023) சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு தமிழ்நாடு அரசு விடுமுறை அறிவித்து செய்தி வெளியிட்டுள்ளது.



தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் நகராட்சி வாரச் சந்தையில் கலைஞர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிதாக கடை கட்டுவதற்கு தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன். எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி துவங்கி வைத்தார். உடன் நகர மன்றத் தலைவர் அய்யம்மாள் ராமு. துணை சேர்மன் முத்துக்குமார், விவசாயத் தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் வேப்பம்பட்டி செந்தில், சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு மாவட்ட அமைப்பாளர் தக்காளி ஹக்கீம், கவுன்சிலர் செண்பகம் மயில்வாகனன், முத்துக்குமரன், கமிஷனர் கோபிநாத் மற்றும் அரசு அதிகாரிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை வேளச்சேரியில்

## மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

### அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

சென்னை, டிச. 7 -

மிக்ஜாம் புயல் காரணமாக, சென்னை வேளச்சேரியில், கனமழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டப் பகுதிகளை ஆய்வு செய்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிவாரணப்பொருள்கள் வழங்கினார்கள்

மிக்ஜாம் புயல் காரணமாக,கடந்த இரண்டு நாட்களாக கனமழை வெள்ளத்தினால், சென்னை முழுவதும் தத்தளித்து வந்த நிலையில், மிகவும் தாழ்வானப் பகுதிகளில் ஒன்றான வேளச்சேரி மற்றும் மடிப்பாக்கம் பகுதி முழுவதும், வெள்ளநீர் சூழ்ந்து பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மிக்ஜாம் புயல் ஆந்திரா மாநிலத்தை நோக்கி நகர்ந்து சென்ற நிலையில், கனமழை படிப்படியாக குறையத் தொடங்கிது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 5.12.2023 அன்று அதிகாலையிலேயே பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளச்சேரி செக்போஸ்ட் பகுதிக்குச் சென்றடைந்தார். 5 பர்லாங் சந்திப்பு பகுதியில், ஏ.ஆர். Fuels என்ற எரிபொருள் நிரப்பும் நிலையத்தில், கடும் மழைவெள்ளத்தின் காரணமாக அலுவலகம் மற்றும் எரிபொருள் கண்டெய்னர் புதைப்பட்டு விட்டது. கண்டெய்னரையும் அதில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த இரண்டு பணியாளர்களையும் மீட்க, மோட்டார் வாகனங்கள் மற்றும் இழுவை இயந்திரங்கள் ஆகியவற்றை உடனடியாக வரவழைத்து மீட்புப் பணிகளை முடுக்கி விட்டார்.

தொடர்ந்து, வேளச்சேரி மற்றும் விஜய நகர் பகுதியில் தேங்கியுள்ள, வெள்ளநீரை அகற்றவும், அதில் பாதிக்கப்பட்டுள்ள மக்களையும் மீட்கவும், மீனவர்களிடமிருந்து படகுகளை எடுத்துவர அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, படகுகளை உடனடியாக வரவழைத்து, வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்க நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

AGS காலனி, சொக்கலிங்கம் தெரு, ராம் நகர் போன்ற பகுதிகளில், உணவு, பால் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல், மக்கள் அவதியுற்றனர். அமைச்சர் அவர்கள் உடனடியாக, ஆவின் நிறுவனத்தை தொடர்பு கொண்டு, 11 ஆயிரம் பால் பாக்கெட்களை வரவழைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார்.

மேலும், வெள்ளநீர் சூழ்ந்து, பொது மக்கள் வெளியில் வர இயலாத இடங்களில், ஜே.சி.பி. இயந்திரத்தில், பால் பாக்கெட்டுகளை அடுக்கிக் கொண்டு சென்று, அமைச்சர் அவர்களே பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து பால் பாக்கெட்களை வழங்கினார்கள்.

சுமார் 5000 உணவு பொட்டலங்களை வரவழைத்து, உணவின்றி, தவித்த மக்களுக்கு வழங்கினார்.

மழை வெள்ளத்தினால், பாதிக்கப்படாத திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர், இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து, நிவாரணப் பொருட்களை கொண்டுவர உத்தரவிட்டு, இந்த நிவாரணப் பொருட்கள் வந்தவுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வேளச்சேரி இரயில்வே ஜங்ஷன் பகுதியில், பால் பாக்கெட்டுகளை பொது மக்களுக்கு வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்திர மோகன் வேளச்சேரி பகுதிப் பொறுப்பாளர் திருமதி. வி.ஆர்.சுப்புலெட்சுமி நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சிறப்பு அலுவலர் இரா. விஸ்வநாத் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சேலம் இளைஞர் அணி மாநாட்டில் 4 ஆயிரம் இளைஞர்கள் பங்கேற்போம்!

### புதுச்சேரி மாநில தி.மு.க. செயற்குழுவில் முடிவு!

புதுச்சேரி, டிச. 7 -

சேலத்தில் வருகின்ற 17-ஆம் தேதி நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டில் புதுச்சேரியில் இருந்து 4 ஆயிரம் இளைஞர்கள் பங்கேற்பது என மாநில செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவரசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நடந்தது.

மாநில கழக அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார் தலைமை தாங்கினார். மாநில துணை அமைப்பாளர்கள் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., அ. தைரியநாதன், பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கூட்டத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

அப்போது, நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்பேரில், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வருகின்ற 17-ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணியின் இண்டாவது மாநில மாநாட்டில் புதுச்சேரி மாநிலக் கழகம் சார்பில், தொகுதிக்கு இரண்டு பேருந்துகள் வீதம் 60 பேருந்துகளில் கழகத்தினர் செல்வது என்றும் தொகுதிக்கு 200 இளைஞர்கள் வீதம் 23 தொகுதிகளைச் சேர்ந்த 4 ஆயிரம் இளைஞர்கள் மாநாட்டிற்கு முதல் நாள் தலைமைக் கழகம் அளிக்கும் கருப்பு, சிவப்பு உடை அணிந்து ஊர்வலமாக சென்று பங்கேற்பது என்றும் மாநாட்டிற்கு செல்லும் கழகத்தினருக்கு மாநில கழகம் சார்பில் மூன்று வேலை உணவு, குடிநீர் வழங்கப்படுகிறது. இதுமட்டுமல்லாமல் மாநாட்டில் கழகத் தலைவர் அவர்களால் சிறப்பாக உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை கழகத்தினர் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவும், மாநாடு முடியும் வரை இருந்து மாநாட்டின் நோக்கத்தை அறிந்து கொள்ளவும், தலைவர்களின் எழுச்சிமிகு உரையை கேட்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ஏற்கனவே கண்டிப்புடன் அறிவித்த பூத் பாக முகவர்கள் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் தொகுதி வாரியாக நியமித்து அவர்கள் தேர்தல் பதிவு அதிகாரியுடன் இணைந்து முகவரி மாற்றம், இறந்தவர்கள் மற்றும் இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் குறித்த பட்டியலை வீடு, வீடாக சென்று கணக்கெடுக்க வேண்டும் என்றும் பூத் வாரியாக நியமிக்கப்பட்ட பாக முகவர்கள் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் பட்டியலை தலைமைக் கழகத்தில் கொடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். சரவணன், டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, சி. கோபால், வே. கார்த்திகேயன், பெ. வேலவன், வீ. சண்முகம், பெ. பழநி, எஸ். அமுதாகுமார், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ.நடராஜன், ஜி.பி.சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல், கோ.தியாகராஜன், ர. சிவக்குமார், ரா.ஆறுமுகம், பி.ஆர்.ரவிச்சந்திரன், க.ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், ம. கலைவாணன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டக் கழகம் சார்பாக தேனியில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில்வருகின்ற டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடக்கும் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட துணை செயலாளர் திருக்கண்ணன், பொருளாளர் சுரேஷ், பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ், நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு பெருந்துறையில்

## கல்வி சாரண - சாரணியர்களுக்கான பயிற்சி!

### அமைச்சர் சி.வி.கணேசன் சிறப்புரை!

ஈரோடு, டிச. 7 -

தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கம் சார்பில் ஈரோடு மாவட்டம் பெருந்துறை சேர்ந்த கல்வி சாரண சாரணியர்களுக்கான ஆண்டு பயிற்சி மற்றும் திருத்திய சோபன் பயிற்சி முகாம் சென்னிமலை அருகில் உள்ள தனியார் கல்லூரியில் ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சம்பத் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில், தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் கலந்து கொண்டு தமிழகத்தில் பல்வேறு துறைகள் இருந்தாலும், கல்வி மற்றும் மருத்துவத்துறையை தன் இரண்டு கண்களாக பார்ப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அந்த வகையில் தான், அரசுப் பள்ளிகளில் காலை உணவு வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

இந்திய அளவில் உற்பத்தி செய்யும் தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களில், 43 சதவீதம் பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என மத்திய அரசு குறிப்பிட்டுள்ளதற்கு முக்கிய காரணம் தமிழக அரசு, மகளிருக்கு இலவச பேருந்து, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குவது போன்ற திட்டங்களை செயல்படுத்தி இருப்பது தான் என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து சாரண - சாரணியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிய அமைச்சர் சி.வி. கணேசன், முகாமில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளையும் கண்டு ரசித்தார்.

நிகழ்வில் தனியார் கல்லூரியின் தலைவர் மக்கள் ராஜன், மாவட்ட இடைநிலை கல்வி அலுவலர் பெல்ராஜ், சென்னிமலை ஒன்றிய கழகச் செயலாளர் செங்கோட்டையன் குமாரவலசு ஊராட்சிமன்ற தலைவர் இளங்கோ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கர்நாடகாவில் கடலில் தத்தளித்த மீனவர்கள் மீட்பு!

பெங்களூரு, டிச. 7 -

கோவா மாநிலம் பனாஜியில் கிறிஸ்டோரே என்ற மீன்பிடி படகில் 27 மீனவர்கள் அரபிக்கடலின் நடுப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு நிலவிய மோசமான வானிலை காரணமாக திடீரென என்ஜின் கோளாறு ஏற்பட்டு படகு வழி தவறியது. இந்த படகில் இருந்த மீனவர்கள் தங்களை காப்பாற்றுமாறு கடலோர காவல்படையினருக்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து அவர்களுடைய படகு எந்த பகுதியில் உள்ளது? என ஆய்வு செய்தபோது கர்நாடக மாநிலம் உத்தர கன்னட மாவட்டம் கார்வார் அருகே அங்கோலாவில் உள்ள பெலிகேரி துறைமுகத்திலிருந்து 30 கடல் மைல் தொலைவில் படகு தத்தளிப்பது தெரியவந்தது. இதனை தொடர்ந்து கடலோர காவல்படையினர் நடுக்கடலில் நீண்ட நேர தேடுதலுக்குப் பிறகு படகை கண்டுபிடித்தனர்.

கடலோர காவல்படையினர் சரியான நேரத்தில் அங்கு வந்ததால் 27 மீனவர்களும் நிம்மதி அடைந்தனர். இதையடுத்து படகில் இருந்த 27 மீனவர்களும் பத்திரமாக மீட்டு அவர்களை மீட்டு பாதுகாப்பாக பெலிகேரி துறைமுகத்திற்கு அழைத்து வந்தனர்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சி. வாசு**

**டிசம்பர் 7 (2014)**



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதியில் வட்டக் கழகப் பொறுப்பாளர், மாவட்டப் பிரதிநிதி, பகுதி துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

சென்னை துறைமுக அறக்கட்டளை உறுப்பினராகவும், தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சித்தமல்லி ந.சோமசுந்தரம்**

**டிசம்பர் 7 (2022)**



இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து பணியாற்றி, கழகம் துவங்கியவுடன், அதில் தன்னை இணைத்துக் கொண்டு சித்தமல்லி கிளைக் கழக அமைப்பை முதன்முதலாக உருவாக்கி, அதன் செயலாளராக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கிளைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

1967, 1971 ஆகிய இரு முறை கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். பல்வேறு கூட்டுறவு சங்கம் மற்றும் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**